சுற்றுநிரூப இலக்கம் - SSD/06/2020

எனது இலக்கம் - SSD/04/02/01/01
சமூக சேவைகள் திணைக்களம்,
2 வது மாடி,
செத்சிறிபாய கட்டம் II,
பத்தரமுல்ல,
2022.09.

மாவட்ட செயலாளர்/பிரதேச செயலாளர் ஊடாக,
சமூக சேவைகள் உத்தியோகத்தர்,
அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமூக சேவைகள்),
அபிவிருத்தி உத்தியோகத்தர் (முதியோர் உரிமைகள்)
பிரதேச செயலகம்,
.............................................................................................................

**சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கு 2013 ஆம் ஆண்டு தொடர்பில் பயிலுனர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்களினைக் கோருதல்**

அங்கவீனமுற்ற நபர்கள் தமது வீட்டிற்கு, சமுதாயத்திற்கு சுமையில்லாது பயனுள்ள நபர்களாக சமுதாயத்தில் வாழ்வதற்கு தேவையான அறிவுத் திறன் மற்றும் உளப்பாங்குகளினை மேம்படுத்துவதற்கு வாழ்க்கைத் தொழிற்பயிற்சியினை வழங்குதல் சமூக சேவைகள் திணைக்களத்தின் பிரதானமான ஒரு கடமைப் பொறுப்பாகும். இவ் வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினூடாக சுயதொழில் ஒன்றில் ஈடுபட்டு வருமானத்தினைப் பெருத்தல் மற்றும் அரச அல்லது பிரத்தியேகப் பிரிவில் தொழில் முயற்சி ஒன்றின் கீழ் தொழிலொன்றில் ஈடுபடுவதற்கும் உதவி கிட்டுகின்றது.

இது வரையில் நாடுபூராவும் அமைந்துள்ள வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களினூடாக வருடந்தோறும் 500 வரையான தொகுதியினர் பயிற்சியினை நிறைவு செய்து வெளியேறியுள்ளதுடன், அவ்வாறு வெளியேறியவர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவதைக் கண்கூடாகக் காணக்கூடியதாகவுள்ளது.

இது தொடர்ல் அரச வருடாந்த பாதீட்டில் பாரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், உரிய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி தொடர்பில் பொருத்தமானவர்களினை அனுப்பி அந்நிதியினைச் சரியானவாறு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் தங்களுக்கு ஒப்படைக்கப்படும் பாரிய பொறுப்பொன்றாக உள்ளது. அவ்வாறு வாழ்க்கைத்தொழிற் பயிற்சியொன்றினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு இயலுமையொன்றினைக் கொண்டிராத தொகுதியினர் தொடர்பில் வேறு வேலை ஒழுங்கொன்றில் ஈடுபடுத்துதல் காலத்தின் தேவைப்பாடொன்று என புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் தொழிற் பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு வரும் பயிலுனர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

**01. தொழிற்பயிற்சிக்கெனத் தெரிவு செய்யப்படுபவர்கள்,**

(i) இலங்கைப் பிரஜையாக இருத்தல்.

(ii) அங்கவீனமுற்ற நபராக இருத்தல்.

(iii) திருமணமாகாதவராக இருத்தல்

(iv) 16- 35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல்.

(v) பயிற்சிப் பாடநெறிக்கான பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

➢ சுயாதீனம் தொடர்பானது.
- தமது அன்றாடப் பணிகளினை தனியாக முன்னெடுத்துச் செல்லும் இயலுமை.
- பெற்றோர்களிடமிருந்து தனியாக ஒதுங்கி வீட்டிலிருந்து வெளியேறி வாழ்வதற்குத் தயாராகுதல்.

➢ பயிற்சியளிக்கக்கூடிய மட்டத்தின் உத்தியோகத்தராக இருத்தல்.
- சொல்லுகின்றவற்றினைப் புரிந்து கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும் இயலுமை. (செவிமடுத்தல்/கிரகித்தல்/ஆலோசனைகளினைப் பின்பற்றுதல்/அவதானம் செலுத்துதல்.)
- நிறுவனக் கற்றலுக்கான குறைந்தபட்ச தயார்நிலையினைக் கொண்டிருத்தல்.

**02. வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.**

தங்களின் வசிப்பிடத்தின் பிரகாரம் பிரதேச செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமூக சேவைகள்), அபிவிருத்தி உத்தியோகத்தர் (முதியோர் உரிமைகள்), மாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர், உதவப்படும் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களினூடாக வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பப் படிவங்களினைப் பெற்று முன்வைத்தல் வேண்டும்.

**03. வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு நபர்களைத் தெரிவு செய்தல்.**

சமூக சேவைகள் திணைக்களத்தினால் பெயரிடப்படும் பிரதிநிதித்துவச் சபையின் செயற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படும் திறன் தேர்வு பெறுபேறுகளின் அடிப்படையில் வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்குத் தெரிவு செய்தல் இடம்பெறும்.

**04. வாழ்க்கைத் தொழிற் பயிற்சிப் பாடநெறிகளின் வகைகள்**

ஒவ்வொரு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் அமுலாக்கப்படும் பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பிலான தகவல்கள், சுற்றுநிரூபத்தின் இறுதியில் இணைப்பு 01 இன்

ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளதுடன், தங்களினால் அத்தகவல்கள விண்ணப்பப் படிவத்துடன் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

**05. அங்கவீனத்தின் தன்மை**

i. கட்புலக் குறைபாடு
ii. கதைப்பதிற் குறைபாடு
iii. உடற் குறைபாடு
iv. மூளைக்கோளாறு
v. கேட்டலிற் குறைபாடு
vi. முள்ளந்தண்டிற் பாதிப்பு (முதுகு வளைவு)

**06. வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவகங்கள்**

| தொ.இல. | வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவகம் மற்றும் முகவரி | தொலைபேசி/பக்ஸ்/ தொலைமடல் |
|---|---|---|
| 01. | சீதுவ வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவகம் லியனகேமுல்ல, சீதுவ | 0112-253503 Vtcseeduwasrilamka.com |
| 02. | அமுணுகும்புர வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவகம் அமுணுகும்புர, வத்துறுகம, | 033-2279321 vtiamunukumbura@gmail.com |
| 03. | கட்டவல வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவகம் கட்டவல, லெவில, கண்டி | 081-2219153 katawalavti@gmail.com |
| 04. | வத்தேகம வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவகம் வாவின்ன, வத்தேகம. | 081-2476209 Socialservices.vtiwattegama@gamail.com |
| 05. | தெளம்புயாய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவகம் தெளம்புயாய, அங்குண கொளபலஸ்ஸ. | 047-3489296 thelambuyaya@gmail.ccom |
| 06. | இராகம வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவகம் புனர்வாழ்வு வைத்தியசாலை, இராகம | 0112-958294 0112-2958212 ragamavtc@gmail.com |
| 07. | மாதம்பே வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவகம், தேவாலய வீதி, பொத்துவில், மாதம்பே. | 032-2248568 vtcssdoffice.madampe@gmail.com |
| 08. | விபவி வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவகம். பகள குருலேகம, மீபாகம களவான. | 045-2255017 vibhavivti@gmail.com |
| 09. | மட்டக்களப்பு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவகம், கும்புறுமூலை, வாழைச்சேனை, | 0653132223 Socialservices.vtcvalaichchenai@gmail.com |
| 10. | கிளிநொச்சி வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம், அறவியர் நகர், கரச்சி. | kilinochchivti@gmail.com |
| 11. | தோலங்கமுவ இணை வாழ்க்கைத்தொழிற் பயிற்சி நிறுவனம், வரக்காப்பொல. | tholangamuwavti@gmail.com |

07. அன்றாடக் கொடுப்பனவுகள்

பயிற்சி பெறும் கால வரையறையினுள் அன்றாடக் கொடுப்பனவு ஒன்று என்ற வகையில், வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினைப் பெறும் விடுதி அல்லது விடுதியற்ற பயிலுனர்களுக்கான அன்றாடக் கொடுப்பனவு - ரூ.150/- ஆகும். இவ் அன்றாடக் கொடுப்பனவு அரசின் கொள்கைத் தீர்மானங்களின் அடிப்படையில் மாறக்கூடும் என்பதுடன் இவ்வாறு வழங்கப்படும் நிதியினை, சம்பளமாகவோ அல்லது வேறு நியதிக் கொடுப்பனவாகவோ கருத்திற் கொள்ளாது பயிற்சியினைப் பெறும் அங்கவீனமுற்ற பயிலுனர்களின் எதிர்வரும் காலச் செயற்பாடுகளினைத் திட்டமிடுவதற்காக வழங்கப்படும் கொடுப்பவொன்றாகும். அது பயிலுனர்களின் வங்கிக் கணக்குக்கு வரவிடப்படும் என்பதுடன், பாடநெறியின் இறுதியில் தயாரிக்கப்பட்ட தனிநபர் திட்டத்தின் பிரகாரம் முன்மொழியப்பட்ட சுய தொழிலுக்குத் தேவையான கருவித் தொகுதியினை வழங்குவதற்கு, தேவையின் பிரகாரம் தகுந்தவாறு பயன்படுத்தப்படும்.

**08. விசேட வசதிகள் மற்றும் சந்தர்ப்பங்கள்.**

i) இலவச வதிவிட வசதிகள் மற்றும் உணவுகள்
ii) இலவச சீருடை மற்றும் அன்றாட தேவைப்பாடுகள் (இறப்பர் செருப்பு, கீழ் உடைகள், பெண் பிள்ளைகள் தொடர்பில் ஆரோக்கியப் பொருட்கள், தேவையான வேளையில் அணிவதற்கு இலகுவான உடைகள், பற்தூரிகை, பல் மருந்து, சவர்க்காரம், சவரம் எடுக்கும் ரேசர்)
iii) வரவுப் பதிவேட்டிற்கு அமைய அன்றாடக் கொடுப்பனவு.
iv) இலவசமாக மருத்துவச் சிகிச்சை
v) நவீன தொழில்நுட்ப உபகரணப் பாவனைக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்.
vi) ஆன்மீகம்சார் நிகழ்ச்சித் திட்டங்கள்
vii) ஆளுமை விருத்தி மற்றும் தலைமைத்துவப் பயிற்சி
viii) இளைஞர் சமூகத்தினை அமைத்து அதனூடாக விளையாட்டுத் திறன்களினை விருத்தி செய்தல்.
ix) கலைகள் மற்றும் கவின்கலைகளினைப் மேம்படுத்துதல் தொடர்பில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள்.
x) தடகள விளையாட்டுக்கள் மற்றும் கலைப் பிரிவில் திறமைகளினைக் கொண்ட பயிலுனர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளுக்கான வாய்ப்புக்கள்.
xi) பேசும் பயிற்சி, உளப் பயிற்சி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி சேவைகள்.
xii) பயிற்சியின் பின்னர் சுய தொழிலொன்றில் ஈடுபடும் பயிலுனர்களுக்கு வணிகத் திட்டங்களினைத் தயாரித்து அதன் பிரகாரம் உபகரணத் தொகுதியினை வழங்குதல்.
xiii) பயிற்சியின் நிறைவில் NVQ/ அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
xiv) பிரத்தியேகப் பிரிவின் தொழில்களுக்கான வழிகாட்டல்

**09. வேறு விசேடமான விடயங்கள் -**

01. ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணமில்லாது பாடநெறிகளை இடைநடுவே விடும் பயிலுனர்கள் மீளவும் தொழிற் பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட மாட்டார்கள். சுகயீனம் அல்லது ஏனைய ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட பாடநெறிக்குச் சமூகந்தராத பயிலுனர்களுக்கு சமூக சேவைகள் பணிப்பாளரின் விசேட அங்கீகாரத்தின் கீழ் பயிற்சிக் காலவரையறையினை நீடிப்புச் செய்துகொள்ள முடியும்.

02. தொழிற் பயிற்சியினைப் பெற்றுக் கொள்ளும் காலவரையறையினுள் நிறுவனத்திற்குத் தீங்கினை விளைவிக்கும் அல்லது ஒழுக்காற்று ஒழுங்குகளை மீறும் பயிலுனர்கள் தொடர்பாக சமூக சேவைகள் பணிப்பாளருக்கு அறிவித்ததன் பிற்பாடு பாடநெறியிலிருந்து அகற்றப்படுவார்.

03. சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவகங்களில் தொழிற் பயிற்சியினை நிறைவு செய்து வெளியேறும் பயிலுனர்களின் பின்னூட்டல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கு, உரிய பிரதேச செயலகங்களின் சமூக சேவைகள் உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்(சமூக சேவைகள்), மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுகத்தின் அத்தியட்சகர்/நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினூடாக இடம்பெறும்.

04. பயிலுனர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் விண்ணப்பப் படிவங்களை, சமூக சேவைகள் திணைக்களத்திற்கு 2022 ஒக்டோபர் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

05. விண்ணப்பப் படிவங்களை **பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், 02 ஆவது மாடி, II ஆவது கட்டம், செத்சிறிபாய, பத்தரமுல்லை** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

06. இது தொடர்பிலான மேலதிக தகவல்களை அறிந்து கொள்ளுவதற்கு 0112187042 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அறிந்துகொள்ள முடியும்.

**டபிள்யு.ஜீ.டீ. கருணாரத்ன,**
மேலதிகப் பணிப்பாளர்.

**ஒப்பம்/ அனோஜா கேரத்,**
சமூக **சேவைகள் பணிப்பாளர்**

**பிரதிகள்**

| | |
|---|---|
| 01. செயலாளர், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | - தயவுகூர்ந்து அ.கொ. |
| 02. மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர்கள் | - தயவுகூர்ந்து அ.கொ. |
| 03. அத்தியட்சகர்/நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் | - தயவுகூர்ந்து அ.கொ. மற்றும் தே.ந.எ |
| 04. அதிபர்கள், உதவப்படும் பாடசாலைகள் | - தயவுகூர்ந்து அ.கொ. மற்றும் தே.ந.எ. |
| 05. தவிசாளர்/பணிப்பாளர்/தன்னார்வ அமைப்புக்கள் | - தயவுகூர்ந்து அ.கொ. மற்றும் தே.ந.எ |

**2023 ஆம் ஆண்டு தொடர்பில் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையங்களில் அமுலாக்கப்படும் பாடநெறிகள்.**

| இல. | வா. தொ.நி. | பாடநெறி |
|---|---|---|
| 01 | கெட்டவல | 01. மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி தொழில்நுட்பக் கலை |
| | | 02. மோட்டார் வாகனங்களுக்கு தீந்தையடிக்கும் கலை |
| | | 03. உருக்குக் கலை |
| | | 04. இயந்திரவியல் |
| | | 05. மோட்டார் வாகனத் தொழில்நுட்பக் கலை |
| 02 | வத்தேகம | 01. பற்றிக் கைவினை |
| | | 02. ஆடைத் தொழில்கள் மற்றும் அதுசார்ந்த கைவினை |
| | | 03. பயிர் வளர்ப்பு விவசாயம் |
| | | 04. கைவினைத் திறன் |
| | | 05. கலை செதுக்குதல் மற்றும் தச்சுக் கலை |
| | | 06. தகவல் தொழில்நுட்பம் மற்றும் வரைகலை வடிவமைப்பு |
| | | 07. அழகுக் கலை (அனைத்துப் பயிலுனர்களுக்குமான பொதுவான பாடநெறி) |
| 03 | தெளம்புயாய | 01. பயிர் வளர்ப்பு விவசாயம் |
| | | 02. உணவுத் தொழில்நுட்பம் |
| | | 03. கையடக்கத் தொலைபேசி, தொலைக்காட்சி தொடர்பான உபகரணங்கள் தொழில்நுட்பம் |
| | | 04. மோட்டார் வாகனத் தொழில்நுட்பக் கலை |
| | | 05. ஆடைத் தொழில்கள் மற்றும் அதுசார்ந்த கைவினை |
| | | 06. கைவினைத் திறன் |
| 04 | சீதுவ | 01. தகவல் தொழில்நுட்பம் மற்றும் வரைகலை வடிவமைப்பு |
| | | 02. குளிர்பதன மற்றும் ஏயாகொண்டிசன் (காற்றுச்சீரமைத்தல்) தொழில்நுட்பம் |
| | | 03. மின்சுற்று தொழில்நுட்பம் |
| | | 04. மோட்டார் வாகனத் தொழில்நுட்பம் |
| | | 05. கையடக்கத் தொலைபேசி, தொலைக்காட்சி தொடர்பான உபகரணங்கள் தொழில்நுட்பம் |
| | | 06. ஆடைத் தொழில்கள் மற்றும் அதுசார்ந்த கைவினை |
| | | 07. கலை செதுக்குதல் மற்றும் தச்சுக் கலை |
| | | 08. நரம்புப் பயிற்சிக் கலை |
| 05 | அமுணுகும்புர | 01. உணவுத் தொழில்நுட்பம் |
| | | 02. சீமெந்துடன் தொடர்பிலான உற்பத்திக் கலை |
| | | 03. பயிர் வளர்ப்பு விவசாயம் |
| | | 04. கைவினைத் திறன் |

இணைப்பு - 01

| | | |
|---|---|---|
| 06 | மாதம்பே | 01. ஆடைத் தொழில்கள் மற்றும் அதுசார்ந்த கைவினை |
| | | 02. தகவல் தொழில்நுட்பம் மற்றும் வரைகலை வடிவமைப்பு |
| | | 03. கைவினைத் திறன் |
| 07 | மட்டக்களப்பு | 01. கையடக்கத் தொலைபேசி, தொலைக்காட்சி தொடர்பான உபகரணங்கள் தொழில்நுட்பம் |
| | | 02. ஆடைத் தொழில்கள் மற்றும் அதுசார்ந்த கைவினை |
| | | 03. தகவல் தொழில்நுட்பம் மற்றும் வரைகலை வடிவமைப்பு |
| | | 04. பயிர் வளர்ப்பு விவசாயம் |
| 08 | கிளிநொச்சி | 01. தகவல் தொழில்நுட்பம் மற்றும் வரைகலை வடிவமைப்பு |
| | | 02. ஆடைத் தொழில்கள் மற்றும் அதுசார்ந்த கைவினை |
| 09 | இராகம | 01. கையடக்கத் தொலைபேசி, தொலைக்காட்சி தொடர்பான உபகரணங்கள் தொழில்நுட்பம் |
| | | 02. தகவல் தொழில்நுட்பம் மற்றும் வரைகலை வடிவமைப்பு |
| | | 03. ஆடைத் தொழில்கள் மற்றும் அதுசார்ந்த கைவினை |
| 10 | தோலங்கமுவ | 01. பற்றிக் கைவினை |
| | | 02. கைவினைத் திறன் |
| 11 | களவான | 01. பயிர் வளர்ப்பு விவசாயம்<br>02. கைவினைத் திறன் |

## வாழ்க்கைத் தொழிற் பயிற்சியிக்குத் தெரிவு செய்யும் விண்ணப்பப் படிவம்

## சமூக சேவைகள் திணைக்களம்

01. மாவட்டம் :............................................ 02. பிரதேச செயலகப் பிரிவு :..................................

03.கிராம உத்தியோகத்தர் தொகுதி :................................ 04. வீட்டு எண் :.....................................

05. குடும்பத் தலைவரின் பெயர் :.................................................................................................

.................................................................................................................................................

06.அவனின்/அவளின் தேசிய அடையாள அட்டை இலக்கம் :.........................................

07. தொலைபேசி இலக்கம் :.......................................

08. அங்கவீனமுற்ற நபரின் தகவல்கள்:

8.1. முழுப்பெயர் :.......................................................................................................................

8.2. அவன்/அவளின் தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..................................................

8.3. அவன்/அவளின் பிறந்த திகதி :......................................................

8.4.அவன்/அவளின் பாலினம் :..............................................

8.5.அவன்/அவளின் நிரந்தர முகவரி :..............................................................................

8.6. அங்கவீன நிலை:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பார்வைக் கோளாறு | | 5 | மூளை வளர்ச்சிக் கோளாறு | |
| 2 | உடற் கோளாறு | | 6 | சுசுமினா (முதுகு வளைவு) | |
| 3 | செவித்திறன் குறைபாடு | | 7 | பலவிதமான கோளாறு | |
| 4 | பேச்சுக் கோளாறு | | 8 | உளக் கோளாறு | |
| 9. மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப்படும் நோய்கள் : | | | | | |
| 10. பிற : | | | | | |

09. கல்வித் தகைமைகள்

9.1.தற்போது பெற்றுக் கொண்ட உயர் கல்வித் தகைமை :...............................................

.........................................................................................................................

9.2. ஏனைய இயலுமைகள் மற்றும் திறமைகள் :..........................................................

10. ஆர்வத்தினைக் கொண்ட பாடநெறிகள்

I............................................................ II.................................................................

III..........................................................................................................................

10.1. படிப்பினைத் தொடர்வதற்கு விருப்பினைக் கொண்ட நிறுவனம் : ..............................

11. குடும்பம் விவரங்கள்

11.1. தாய்/தந்தை/பாதுகாவலர் தொழில் செய்கின்றார் | ஆம்/இல்லை |

11.1.1 அவ்வாறாயின் மாதாந்த வருமான நிலவரம் :...........................................................

11.2. அவன்/அவளின் தொழில் :...........................................................................................

11.3. குடும்பத்திலுள்ள சகோதரர்/சகோதரிகளின் எண்ணிக்கை (அ) சகோதரர் .......... (ஆ) சகோதரிகள் ..........

11.4. குடும்பத்தில் வேறு அங்கவீனர் உள்ளனரா? | ஆம்/இல்லை |

11.5. இருப்பின் அவர்கள் யாவர்?

(அ) தாய்/தந்தை ...................... (ஆ) சகோதரர்/சகோதரிகள் ............ (இ) பிறர் ............

மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................
விண்ணப்பதாரர்/தாய்/தந்தை அல்லது பாதுகாவலரின் ஒப்பம்

12. வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதைப் பரிந்துரைக்கின்றேன்.

.............................................
சமூக சேவைகள் உத்தியோகத்தர்/அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமூக சேவைகள்)
(இறப்பர் முத்திரை)

13. பிரதேச செயலாளரின் பரிந்துரை

பரிந்துரைக்கின்றேன்/பரிந்துரைக்கவில்லை

திகதி :..........................

.............................................
பிரதேச செயலாளரின் ஒப்பம்
(இறப்பர் முத்திரை)